
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1119

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

103

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# வளர்ச்சிப் பாதையின், முதல் படி நீதிக்கட்சி!

*28-06-1936,* அன்று ராசிபுரம் தாலுகா ஜஸ்டிஸ் மாநாடு, நகரின் சரஸ்வதி எலெக்டிரிக் தியேட்டரில் சௌந்திரபாண்டியனார் தலைமையில் நடைபெற்றது. சௌந்தரபாண்டியனார், தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, வி.வி.ராமசாமி, கே.ஏ.பி.விஸ்வநாதம், பொன்னம்பலனார் உள்ளிட்டோருடன் சேலம், ஜலகண்டாபுரம் பகுதிகளில் இருந்தும் பலர் 9 மணிக்கே ராசிபுரம் வந்தடைந்தனர். தலைவர்கள் மாநாட்டுக் கொட்டகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழிநெடுக வரவேற்பு வளைவுகள் கட்டப்பட்டிருந்தன.

ஊர்வலம் சுமார் 10 மணிக்கு, மாநாட்டுக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தது. அப்போது மாநாட்டுக் கொட்டகையில், 2,000 பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர். சேலம், ஜலகண்டாபுரம், ஓமலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், ஏத்தாப்பூர், அரூர் முதலிய இடங்களிலிருந்து ஏராளமானோர் வருகை தந்திருந்தனர். தொடக்கத்தில் சுயமரியாதை இயக்கப் பாடல்கள் பாடப்பட்டன. மாநாட்டைத் திறந்து வைத்து பேசிய எஸ்.பி.ராஜமாணிக்கம், “இன்று குமாரசாமி இம்மாநாட்டைத் திறந்துவைக்க வேண்டும். ஆனால், அவரால் வர முடியாத சூழலில் அந்த வாய்ப்பை, எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். நமது கட்சி (நீதிக்கட்சி) நாட்டுக்குச் செய்துள்ள ஊழியத்தை விட, வேறு எந்தக் கட்சியும் கூடுதலாகச் செய்துவிடவில்லை. இனியும் மகத்தான வேலை செய்யப்போகிறது” என்றார்.

ஓவியம் : சிகரன்




வரவேற்புரையாற்றிய பி.ஏ.என்.காவேரி, “நமது கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கல்விக்காக இம்மாகாணத்தில் ரூ.146 லட்சம் செலவிடப்பட்டது. ஆனால், நமது கட்சியின் ஆட்சியில் 1935-இல் மக்களின் கல்வியறிவை உத்தேசித்து, ரூ.225 லட்சம் செலவளித்துள்ளது. பாதைகள், பாலங்கள் அமைக்க 1920-இல் 27 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1935-இல் ரூ.66 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. கைத்தொழில், விவசாயத்துக்கு 1920-இல் ரூ.38 லட்சம்தான் செலவிடப்பட்டது. 1935-இல் ரூ.58 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஓட்டுரிமை, கல்வி வசதி, தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்கான கல்விக்கூடங்கள், வண்டிகள், பொது இடங்களில் இருந்த தடையை நீக்கி, பிற சமூகத்தினருடன் அளவளாவி மனிதத்தன்மையோடு வாழ்வதற்கு உரிய சூழலை ஏற்படுத்தியுள்ளோம்” என நீதிக்கட்சி ஆட்சியின் சாதனைகளைத் தரவுப்பூர்வமாக விவரித்தார்.

தலைமை வகித்துப் பேசிய சௌந்தரபாண்டியனார், “இந்நாட்டு மனித வர்க்கத்தில் இருந்து வரும் பிரிவையும், உயர்வு தாழ்வையும், ஒற்றுமைக் குறைவையும் பரஸ்பர அவநம்பிக்கையையும், ஒருவர் உழைப்பை ஒருவர் அனுபவிப்பதைக் கண்டும், அதனால் வேறு பல கஷ்டங்கள் ஏற்பட்டு, அவை பலப்பட்டு வருவதை அறிந்தும், சமூக முன்னேற்றமும் சமூக உரிமையும் பிரதானம் என்று கொள்கை வகுத்திருக்கிறோம். இக்கொள்கைகளைப் பற்றி நமது எதிரிகள் எவ்வளவுதான் குறைகூறி வந்தாலும் அதிலிருந்து பிசகாமல் இருக்கிறோம்”என்றார்.

அதன்பிறகு, டாக்டர் நாயர் படத்தை, திருச்சி கே.ஏ.பி.விஸ்வநாதமும், தியாகராயர் படத்தை பெரியாரும், பனகல் அரசர் படத்தை, அன்றைக்கு விருதுநகர் நகர்மன்றத் தலைவராக இருந்த வி. வி.ராமசாமியும் திறந்து வைத்தனர். பிறகு மாலை 6 மணிக்கு ராசிபுரம் சந்தைப்பேட்டை மைதானத்தில் விருதுநகர் வி.வி.ராமசாமி தலைமையில், பொதுவெளியில் கூட்டம் தொடங்கியது. அங்கு பேசிய பட்டுக்கோட்டை அழகிரி, அன்றைய காங்கிரஸ் கட்சிக்கும், நீதிக்கட்சிக்குமான வித்தியாசங்களை விளக்கிப்பேசினார். நீதிக்கட்சி மீது அன்றைக்கு காங்கிரசார் வைத்து வந்த கடும் விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுத்து, சுமார் ஒரு மணி நேரம் பேசினார் பெரியார்.

...கூட்டம் திரளும்

### தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை தொடர...

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை தொடர, மறுபடியும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிக்கு வர வேண்டும் என முகநூலில் கருத்து பகிர்ந்துள்ளார் எழுத்தாளர், இயக்குநர் தமயந்தி. அவரது பதிவிலிருந்து...

‘கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் அரசால் பெண்கள் பெற்றிருக்கக் கூடிய பெரும் பெயர்களை நாம் குறைத்து மதிப்பிடவே இயலாது. கட்டணமில்லாப் பேருந்துகளாகட்டும் அல்லது கல்வியில் பெண்களுக்கான முதன்மை நிலைகளாகட்டும் - எதுவாக இருந்தாலும் ‘திராவிட மாடல் ஆட்சி’ என்று ஒரு சிலரால் நகைச்சுவையோடு குறிப்பிடப்படக்கூடிய அந்த ஆட்சிதான் எல்லாவற்றையும் சாத்தியப்படுத்தி இருக்கிறது .

கட்டணமில்லாப் பேருந்து என்பதை, கையில் காசே இல்லாத பெண்கள்தான் உணர முடியும். அப்படியான ஒரு நிலையில், நான் இருந்திருக்கிறேன் என்பதால் எனக்கு அது நன்றாகவே தெரியும். பெண்கள் கல்வி பெறுவது என்பது ஒரு சமூகத்தின் எழுச்சியைப் போன்றது. கடந்த ஆட்சியில், அதாவது அதற்கு முன்னதான ஆட்சியில் இதுபோன்ற மேலான மேம்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா என்ற கேள்விக்கு, முதலில் பதில் சொல்ல வேண்டும்.

வளர்ச்சியின் பாதையில் தமிழ்நாடு செல்வதை, பிற மாநிலங்களுக்குச் செல்லும் பொழுதுதான் நமக்கு புலப்படும். அரசாங்கப் பள்ளிகள் மேலோங்கி இருப்பது புள்ளிவிவரக் கணக்கில் நன்றாகவே தெரிகின்றது. என்றாலும், குறை சொல்பவர்கள் ஏதாவது ஒரு சமூக இடர்பாடுகளை முன்வைத்து குறை சொல்லக்கூடும். அவற்றையெல்லாம், ஆட்சியாளர்கள் குறிப்பெடுத்து அடுத்த ஆட்சிக் காலத்தில் களைய வேண்டும். தமிழ்நாட்டில் மத ரீதியிலான எந்தப் பிரச்சினையும் நகக்கீறல் அளவுக்கு கூட விழாது இருக்க வேண்டும். அதற்கு மறுபடியும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிக்கு வர வேண்டும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஃப்ளாஷ்பேக்



### பிறந்த நாளில் பாராட்டு!



சண்முகம் முருகன்

2001-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 மற்றும் 10 தேதிகளில் மதுரை அழகர் கோயில், பொய்கைக்கரைப்பட்டியில் இளைஞர் அணியின் பயிற்சி பாசறைக் கூட்டம் இனமானப் பேராசிரியர் தலைமையில் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர், கழக முன்னோடிகள் அய்யா வெற்றிகொண்டான், அய்யா நன்னன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் விடுதலை விரும்பி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில், ‘இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்’ என்கிற தலைப்பில் உரையாற்றி பாராட்டுப் பெற்றேன். அதற்காக தலைவர் அவர்கள், ‘நெஞ்சுக்கு நீதி’ மூன்று பாகங்களும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயமும் அளித்துச் சிறப்பித்தார். அன்று எனது பிறந்த நாள் என்பதால், தலைவரின் பாராட்டு கூடுதல் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளித்தது.

**- சண்முகம் முருகன், கழகப் பொறுப்புக் குழு உறுப்பினர், காளவாசல் பகுதி, மதுரை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

103

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தனியிசை எனும் புதுப் போக்கு!

“ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்”- என்ற தி.மு.கழகத்தின் 2026 தேர்தல் பிரச்சாரப் பாடல் இணைய வெளியையும் பொது வெளியையும் சூழ்ந்திருக்கிறது. இந்தப் பாடல் தனியிசை வகைமையைச் சேர்ந்தது. சாய் அபயங்கரின் துள்ளல்தன்மை கொண்ட இசையுடன் வரலாற்றை, கொள்கைத் தெளிவுடன் பதிவு செய்துள்ளது இந்தப் பாடல். மரபிசை, திரையிசை என வெகுஜன மைய இசைக்கு இணையாக எதிர் கலாச்சாரமாக வளர்ந்து வருவது தனியிசை (INDIE MUSIC) என்று விளிக்கப்படுகிறது.

அகராதியின் படி தனியிசை என்பது புரவலர் அற்ற, பொருளாதார பின்புலமற்ற, கலைஞர்கள் தன்னிச்சையாக உருவாக்கும் இசையைக் குறிக்கிறது. சிறு குறு இசை நிறுவனங்களின் துணைகொண்டு உருவாக்கப் படும் ‘ராக் மற்றும் பாப்’ இசை வகைகளும் இப்படிச் சுட்டப்படுகின்றன.

அப்படியான தனியிசையைத் தமிழ்ச் சூழலில் பொருத்திப் பார்த்து, அதன் தோற்றம், வளர்ச்சி, அடைந்துவரும் மாற்றம், தற்காலப் போக்கு ஆகியவற்றை விவரிக்கும் நூல்தான் ஆர்.ஸ்ரீனிவாசன் எழுதி இருக்கும் ‘தனியிசை: எதிர் கலாச்சாரம் பிறக்கிறது’.




‘ஆழி பதிப்பகம்’ இந்த நூலை வெளியிட்டிருக்கிறது.

தமிழில் தனியிசை குறித்து, வெளியாகும் முதல் நூல் இது. 110 பக்கங்களில் தனியிசை குறித்துத் தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் பல புதிய திறப்புகளை அளிக்கிறது இந்நூல்.

20-ஆம் நூற்றாண்டில் திரைத்துறைக்கும் இசைக்குமான இணைவை, தியோடர் பாஸ்கரன் துணைகொண்டு நமக்கு விளக்குகிறார் நூலாசிரியர், பின்னாட்களில், திரையிசை பெற்ற மாற்றங்களைச் சுட்டிக்காட்டி, இந்தியாவில் நிலவிய தற்சார்புப் பொருளாதாரம் 80 கள் வரையிலும் மேற்குலகில் நடைபெற்ற இசை வடிவ மாற்றங்களை, இந்தியச் சூழலுக்குக் கடத்த தவறியதையும் கவனப்படுத்துகிறார். சந்தை மெல்லத் திறக்கப்பட்ட பிறகு, உலகமயமாக்கலும், தாராளமயமாக்கலும், தனியாரின் வருகையும் இசைக்கும் திரைக்குமான உறவில் ஒரு நெகிழ்வை ஏற்படுத்துகிறது. திரைஇசையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், ஹாரிஸ் ஜெயராஜ் போன்ற இசையமைப்பாளர்களே பல நேரம் இதனை முயன்று பார்த்து வெற்றிகண்டும் இருக்கிறார்கள்.

21-ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் ‘ராப்’, ‘ஹிப்ஹாப்’ போன்ற வடிவம் தமிழ்ச் சூழலில் எழுச்சி பெறுகிறது. அத்தகைய இசை உருவாவதற்கான சமூகச்சூழல் இங்கு நிலவவில்லை என்றாலும், மேற்கத்திய கலாச்சாரத்தின் வருகை அதனைச் சாத்தியப்படுத்துகிறது.

இதன் விளைவாகத்தான் பால் ஜேக்கப் போன்ற இசைக் கலைஞர்கள் தனியிசை முயற்சியில் இறங்குகிறார்கள். நாட்டுப்புறம் சார்ந்த மரபிசையை நவீன பெருநகரங்களில் இசைக்கும் ‘சென்னை சங்கமம்’ போன்ற நிகழ்ச்சியின் தோற்றத்தில் பால் ஜேக்கப் போன்ற தனியிசைக் கலைஞர்கள் தாக்கம் செலுத்தி இருக்கும் செய்திகளை எல்லாம் இந்நூல் நமக்களிக்கிறது.

தனியிசை மீது இன்றுள்ள தலைமுறையினரிடம் பெரும் ஈர்ப்பும் வரவேற்பும் இருக்கிறது. அது குறித்த புரிதலோடு எதிர்வரும் காலங்களில் பல புதிய நூல்கள் வெளியாக, இந்த நூல் தொடக்கமாக இருக்கும். தனியிசை எனும் புதுப் போக்கை அறிந்துகொள்ள விரும்புவோர் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது.

...வாசிப்போம்.

## கழகம் உருவாக்கம்

### தீர்மானமும் செயல்வடிவமும்...

1966-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 30-ஆம் தேதி, கழகப் பொதுக் குழு - செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. மறைந்த கழக முன்னோடிகள் கே.கே.நீலமேகம், போளூர் சுப்ரமணியம் உள்ளிட்டோருக்கு அஞ்சலி செலுத்தியதுடன், ‘தாஷ்கண்ட் ஒப்பந்த’த்தை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றியது. சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கச் சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று, அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அடுத்த இரண்டு ஆண்டுகளில், கழக ஆட்சியில் செயல்வடிவம் பெற்றது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.